00658

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் The Open University of Sri Lanka

மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

**Faculty oF Humanities And Social Sciences**

தமிழ் மற்றும் தமிழ்மொழி கற்பித்தலில் சிறப்புக் கலைமாணி - 2023/2024

**Bachelor of Arts (Honors) in Tamil and Tamil Language Teaching - 2023/2024**

இறுதிப் பரீட்சை **(Final Exam)**

மட்டம் **(Level)** - 03 பருவம் **(Semester)** - **II**

**LEU3314-** இலங்கையில் மொழிக்கொள்கை **(Language Policy in Sri Lanka)**

மூன்று (03) மணித்தியாலங்கள்

**Three (03) Hours**

| | |
|---|---|
| திகதி:- 18.05.2025 | நேரம்: பி.ப 01.30 - பி.ப 04.30 |
| **Date :- 18.05.2025** | **Time : 01.30 p.m - 04.30 p.m** |

அறிவுறுத்தல்கள்/**Instructions**

- தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசியுங்கள்
- விடைக்குரிய சரியான வினா இலக்கங்களைக் குறிப்பிடுக
- தரப்பட்டுள்ள ஆறு (06) வினாக்களுள் நான்கு (04) வினாக்களைத் தெரிவு செய்து விடையளிக்குக
- தெளிவற்ற எழுத்துகள், எழுத்துப்பிழைகள், இலக்கணப்பிழைகள் ஆகியவற்றுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும் என்பதனைக் கவனத்திற் கொள்க

- Read the given instruction carefully
- Write the correct question numbers for the answers
- Answer only 4 Questions
- Mark will be deducted for unclear writing, spelling and grammatical errors

> முக்கிய குறிப்பு **(Note)** :
>
> உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளின் முன்பக்கத்தில் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுட்டெண்ணைச் சரியாகக் குறிப்பிடுக.
>
> **At the front page in your answer sheet, mention your correct Index Number.**
>
> சுட்டெண்ணைப் பிழையாக எழுதினால் உங்களால் புள்ளிகளைப் பெற முடியாது என்பதைக் கவனத்திற் கொள்க.
>
> **If you write your Index Number incorrectly, marks will be not obtained.**

தரப்பட்டுள்ள ஆறு (06) வினாக்களுள் நான்கு (04) வினாக்களை மட்டும் தெரிவு செய்து விடை எழுதுக. வினாக்களை முழுமையாக வாசித்துப், பூரணமாக விளங்கிக் கொண்டதன் பின்னர் விடைகளை எழுதவும்.

1. "பெரும்பாலான நாடுகளில் பெரும்பான்மையினர் பேசுகின்ற மொழிகளே அந்நாடுகளின் அரசியல் மற்றும் சட்டப் பாதுகாப்பிற்குட்பட்டு நீண்டு நிலைத்திருக்கும் அதேவேளை சிறுபான்மையினரால் பேசப்படுகின்ற மொழிகளுக்கு எவ்வளவு தான் சட்டப் பாதுகாப்புக்கள் வழங்கப்படுகின்ற போதும் அவை பெரும்பான்மை மொழி என்ற ஆதிக்கத்திற்குள் சிக்குண்டிருப்பதைக் காணமுடிகிறது."

   அ. மொழிப் பன்முகத்தன்மையைக் கொண்ட நாடுகளில் பன்மொழிக் கொள்கையொன்றின் அவசியம் யாது?

   ([illegible] புள்ளிகள்)

ஆ. இலங்கையில் பன்மொழிச் சட்டக் கொள்கையின் பிரதான அம்சங்களை எடுத்துக்கூறி, சிறுபான்மையினரால் பேசப்படுகின்ற மொழிகளுக்கு வழங்கப்பட்டுள்ள ஏதேனும் பாதுகாப்புப் பொறிமுறைகளை உதாரணங்காட்டி விளக்குக.

(15 புள்ளிகள்)

2. பிரித்தானிய காலத்திலான காலனித்துவ மொழிக் கொள்கையானது இலங்கையின் (அ) நிர்வாகத்துறை மற்றும் (ஆ) கல்வித்துறையில் ஏற்படுத்திய மாற்றங்களை விரிவாக ஆராய்க.

(25 புள்ளிகள்)

3. இலங்கையின் பின்காலனித்துவ மொழிக்கொள்கையின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) 1947ஆம் ஆண்டு தொடக்கம் 1978ஆம் ஆண்டு வரையான இலங்கையின் மொழிக்கொள்கை எவ்வாறாக காலத்துக்காலம் மாற்றமடைந்ததென விபரிக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் இரு மொழிக்கொள்கையை அடைவதற்கான பாதையில் இருந்த முக்கிய சவால்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

4. 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் கீழான மொழிக்கொள்கையின் வரலாற்று வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழான மொழிக்கொள்கை

(ஆ) 16ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழான மொழிக்கொள்கை

(12 1/2 x 2= 25 புள்ளிகள்)

5. பின்வரும் சம்பவங்கள் இலங்கையில் நடந்துள்ளதாக கருத்திற்கொள்க. சம்பவங்களில் தரப்பட்டுள்ள பிரச்சினைகளை இனங்கண்டு அவர்களுக்கு ஆலோசனை வழங்குக. உமது ஆலோசனையானது இலங்கையின் சட்ட மற்றும் மொழிக்கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுதல் வேண்டும்.

(அ) தீவிரவாதக் குற்றமொன்றின் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட குமார் என்பவன் பொலிஸ் தடுப்புக் காவலின் போது அவனது மொழியான தமிழில் அன்றி சிங்கள மொழியில் அவனிடமிருந்து குற்ற ஒப்புதல் பெறப்பட்டது.

(08 புள்ளிகள்)

(ஆ) ராஸி என்பவன் தனக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள முறைப்பாடு சிங்கள மொழியில் இருப்பதனால் தனக்கு ஒரு மொழி பெயர்ப்பாளர் அவசியமென பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் வேண்டுகிறான்.

(08 புள்ளிகள்)



16

(இ) சிறுபான்மை மொழியினர் அதிகமாக வாழும் கம்பட்ட எனும் பகுதியில் பெரும்பான்மை மொழி பேசும் ஒருவர் கிராமசேவகராகப் பணியாற்றுவதுடன் அக்கிராம சேவக அலுவலகத்தின் ஆவணங்களும் பெரும்பான்மை மொழியில் காணப்படுவது குறித்து அப்பகுதிவாசிகள் கிராமசேவகரிடம் முறையிடுகின்றனர்.

(09 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுக்கு சிறுகுறிப்பு எழுதுக.

(அ) இலங்கை அரசகரும மொழிகள் திணைக்களத்தின் பணிகள்

(ஆ) தற்கால உலகில் ஆங்கிலமொழிக் கல்வியின் அவசியம்

(12 1/2 x 2 = 25 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமையுடையது -